பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 பங்குனி 20 செவ்வாய்க்கிழமை (03.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 127

அம்பாறை பஸ் குண்டு வெடிப்பில் பயணிகள் 17 பேர் பலி; 25பேர் காயம்

கொண்டைவெட்டுவான் முகாம் அருகே சம்பவம்

அம்பாறை கொண்டைவெட்டுவான் இராணுவச் சோதனை நிலைக்கு அருகே பயணிகள் பஸ் ஒன்றில் நேற்று நண்பகல் சக்திவாய்ந்த குண்டு வெடித்ததில் குறைந்தது 16 பேர் உயிரிழந்தனர். மேலும் 25 பேர் வரை படுகாயமடைந்திருக்கின்றனர். அவர்களில் பலரது நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

இராணுவத்தினரின் சோதனைக்காக பஸ் தரித்து நின்ற சமயத்திலேயே இந்த அனர்த்தம் நேர்ந்தது. இறந்தவர்களில் பலரும் பெரும்பான்மை இன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்று முற்கொண்டு வெளியாகிய தகவல்கள் தெரிவித்தன.

அம்பாறையில் இருந்து சுமார் 50 பயணிகளை ஏற்றிக் கொண்டு பதுளை மாவட்டம் பிபிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தபயணிகள்பஸ்ஸிலேயேகுண்டுவெடிப்பு இடம்பெற்றிருக்கிறது.

அம்பாறை நகரில் இருந்து வடமேற்கே 5 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் கொண்டைவெட்டுவான் பகுதியில் இராணுவத்தினரின் சோதனைக்காக அங்குள்ள சோதனைச்சாவடி ஒன்றில் பஸ் தரித்து நின்றது. இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் பயணிகளைச் சோதனை செய்வதற்காக (03 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள் மீது குற்றச்சாட்டு ஆனால் அவர்கள் அடியோடு மறுப்பு

கொழும்பு, ஏப்.3

அம்பாறை கொண்டைவெட்டுவானில் நேற்று பயணிகள் பஸ்ஸில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்புக்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்று அரசுத் தரப்பில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

''இது விடுதலைப் புலிகளின் வேலை என்பது தெளிவாகத் தெரிவதாக'' இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க குறிப்பிட்டார்.

பயணிகள் பஸ் வண்டிகளில் இதற்கு முன்னரும் புலிகள் இதுபோன்ற குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசுப்படைகள் தரப்பில் (03 ஆம் பக்கம் பார்க்க)

அரசியல் - இராணுவ வழிகள் இரண்டும் கலந்தே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும்

இந்தியாவும் இந்த அணுகுமுறையையே ஆதரிப்பதாகக் கூறுகிறார் போகொல்லாகம

புதுடில்லி,ஏப்ரல் 3

எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கு, அரசியல் மற்றும் இராணுவ வழிகள் கலந்த அணுகுமுறையைக் கைக்கொண்டே தீர்வு காண்பதற்கு முடிவுசெய்துள்ளோம்.

மேற்படி அணுகுமுறை மூலமான எமது முயற்சியை இந்தியாவும் ஆதரிக்கிறது.

இவ்வாறு இங்கு தெரிவித்தார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் றோகித போகொல்லாகம.

இன்று ஆரம்பமாகும் 'சார்க்' நாடுகளின் 14ஆவது உச்சிமாநாட்டை முன்னிட்டு இந்திய, இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் நேற்றுச் சந்தித்துப் பேசினர்.

அதன்பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த போதே இலங்கை அமைச்சர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அப்போது செய்தியாளர்களில் ஒருவர் - உங்கள் நாட்டின் பிரச்சினைக்கு இந்தியா அரசியல் தீர்வு காணப்படுவதையே விரும்புகிறது. ஆனால், நீங்கள் இராணுவத் தீர்வையே நாடுகிறீர்கள் ஏன்? - என்று கேட்டார்.

அவ்வாறு இல்லை. எமது அணுகுமுறை இரண்டும் - அரசியல் தீர்வும் - இராணுவத் தீர்வும் - கலந்ததே. எங்கள் இந்த முயற்சியை இந்தியாவும் ஆதரிக்கிறது - என்றார் அமைச்சர் றோகித.

நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் போகொல்லாகம தெரிவித்த ஏனைய முக்கிய விடயங்கள் வருமாறு:

★இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பொருட்டு, தமிழ் பேசும் பிரதேசங்களுக்கான அதிகாரப் பகிர்வுப் பொதி ஒன்று எட்டு வாரங்களில் அறிவிக்கப்படும்.

★அந்தத் தீர்வுப் பொதியை ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆராய்ந்து, அங்கீகரித்து விட்டது.

★பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண்பதில், தமிழீழ விடுதலைப்புலிகளையும் ஒருதரப்பாகநாம் சேர்த்துக்கொள்வோம்.

★அரசியல் தீர்வு ஒன்றைக் காணுமுக (04 ஆம் பக்கம் பார்க்க)

கன்னியாகுமரி மாவட்டத்தில் 50ஆயிரம் மீனவர் ஆர்ப்பாட்டம்

சென்னை, ஏப்.3

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை மேற்கொண்டு வரும் தாக்குதல்களைக் கண்டித்து கன்னியாகுமரி மாவட்டத்தில் 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 44 கடலோரக் கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை. (04 ஆம் பக்கம் பார்க்க)

ஜி.சீ.ஈ.பரீட்சை முடிவுகள் இன்று

கொழும்பு,ஏப். 3

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையின் பெறுபேறுகள் இன்று வெளியாகின்றன என்று பரீட்சைத் திணைக்கள ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்தார். இது தொடர்பில் கடந்த சில நாள்களாக வெளியாகிய வதந்திகளை நம்பவேண்டாம் என்று அவர் பரீட்சார்த்திகளைக் கேட்டிருக்கின்றார்.

இன்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் சகல முடிவுகளையும் பரீட்சைத் திணைக்களத்தில் இணையத்தளத்தில் (www.doenets.lk) பார்வையிடலாம் என்றும் ஆணையாளர் மேலும் தெரிவித்திருந்தார். ஆயினும் நேற்று இரவு சுமார் 10 மணியளவில் முடிவுகளை மேற்படி இணையத்தளத்தில் பார்வையிடக்கூடியதாக இருந்தது. (சி-அ)

நாடாளுமன்றில் நாளை சிவாஜிலிங்கம் விசேட அறிக்கை

சென்னை, ஏப்.3

தாம் பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டது குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் நாளைநாடாளுமன்றத்தில்விசேட அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்கவுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளமை தொடர்பாக சிவாஜிலிங்கம் இந்தவிசேட அறிக்கையைச் சமர்ப்பித்து உரையாற்றுவார்.

இதேவேளை, நாளை பிற்பகல் 2 மணிக்கு ஆஜராகுமாறு, பயங்கரவாதத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு சிவாஜிலிங்கத்தைக் கேட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் ஆயுதக் கடத்தலைத் தடுக்க கடலில் கூட்டிணைக்கப்பட்ட ரோந்து தேவை

வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் இலங்கை

புதுடில்லி, ஏப்.3

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகரித்துவரும் ஆயுதக் கடத்தலை நிறுத்துவதற்கு இலங்கை - இந்திய கடற்பரப்பில் கூட்டிணைக்கப்பட்ட ரோந்து நடவடிக்கைகள் உடனடியாக அமுல் செய்யப்படவேண்டும்..

சார்க் உச்சி மாநாட்டுக்கு முன்னோடியாக நேற்று நடைபெற்ற வெளிவிவகார அமைச்சர்கள்கூட்டத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம வலியுறுத்தினார்.

இலங்கை, இந்திய மீனவர்களின் பாதுகாப்புக் கருதியும் அது விடயத்தில் தவறு எதுவும் நடந்து விடாமல் பார்த்துக்கொள்ளவும் கூட்டுக்கடல் ரோந்து அவசியமாகிறது என்றும் அவர் பின்னர் நடந்த செய்தியாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்.

அதற்கு, அங்கு பிரசன்னமாக இருந்த இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவ்சங்கர் மேனன் -

இலங்கை முன்வைத்த அத்தகைய யோசனை இப்போது பரிசீலனையில் உள்ளது - என்றார்.

ஆஸ்திரேலியாவுக்கு அருகே நிலநடுக்கம், சுனாமி!

மெல்போர்ன், ஏப்.3

பசிபிக் கடல் பகுதியில் ஆஸ்திரேலியாவை அண்டிய சாலமன் தீவில் நேற்று அதிகாலை 2.10 மணிக்கு திடீர் என்று நிலநடுக்கம் ஏற்பட்டது.

சக்திவாய்ந்த இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 7.6 புள்ளிகளாக பதிவானது. இந்த நிலநடுக்கம் நிஜார்ஜியா பகுதியில் கடலுக்கு அடியில் 10 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது. இந்த நிலநடுக்கம் காரணமாக ஏராளமான வீடுகள், கட்டடங்கள் குலுங்கின. சில வீடுகள் இடிந்து விழுந்தன.

இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து அந்த தீவுகளின் கடலோர பகுதிகளை சுனாமிப் பேரலைகள் தாக்கின. 5 மீற்றர் உயரத்துக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்களை சர்வதேசத்திற்குக் கூட்டமைப்பு விளக்கும்

கொழும்பு, ஏப்.3

வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் அனுபவிக்கும் அவலங்கள் தொடர்பாக சர்வதேசத்தின் கவனத்துக்குக் கொண்டுவரும் பிரசார நடவடிக்கையைத் தீவிரமாக முன்னெடுப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு செய்துள்ளது.

வடக்கு - கிழக்கு நிலைமை தொடர்பாக ஆராய்வதற்காக தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கொழும்பில் கூடி ஆராய்ந்தனர்.

நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில், உடனடியாக எடுக்கவேண்டிய செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

வடக்கு - கிழக்கில் தொடரும் தாக்குதல்கள், அதனால் இடம்பெயரும் மக்களின் அவல நிலை தொடர்பாக விரிவாகவும் புள்ளி விவரங்களுடனும் இந்தியா உட்பட சர்வதேச சமூகத்துக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக் கடற்பரப்பில் எமது மீனவரின் கொலை இந்தியாவுக்கு விடுக்கப்படும் பெரும் சவால்!

தமிழக சட்டசபையில் கருணாநிதி

இந்தியமீனவர்கள்இலங்கைக்கடற்பரப்பில்கொல்லப்படுவது இந்தியாவுக்கு விடுக்கப்படும் பெரும் 'சவால்' ஆகும்.

பாக்குநீரிணையில் இலங்கை - இந்தியக் கடற்படைகள் கூட்டு ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளும் திட்டத்தை நாம் ஆதரிக்கவில்லை. (04 ஆம் பக்கம் பார்க்க)

முனைக்கடலில் குண்டுச்சத்தங்கள்

வடமராட்சி, பருத்தித்துறை முனைக்கடற்பரப்பில் நேற்றிரவு 11.05 மணி தொடக்கம் பலத்த குண்டுச் சத்தங்கள் தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தன. அதேவேளை, பலாலி படைத்தளத்தில் இருந்து பரா வெளிச்சக்குண்டுகள் ஏவப்பட்டு கடல் பகுதிக்குள் ஷெல் தக்குதல்கள் நடத்தப்பட்டன. இவற்றின் காரணமாக அந்தப் பகுதி மக்கள் அச்சத்தினால் இடம்பெயர்ந்ததாக அறியவந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக ஊர்ஜிதமான விவரங்களை உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. (அ-1)

மயிலம்பா வெளியில் பதற்றம்; தொழிலாளர் அறுவர் கொலை

மட்டக்களப்பு, ஏப்.3

ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மயிலம்பா வெளிப் பிரதேசத்தில்வைத்து ஆறுபேர் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மேலும் மூன்றுபேர் மட்டக்களப்பு போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். அரசசார்பற்ற தொண்டு நிறுவனம் ஒன்றில் கட்டட நிர்மாண வேலைகளில் ஈடுபட்டுவந்த கட்டடத் தொழிலாளர்களே இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொலைசெய்யப்பட்டவர்கள் ஆறுபேரும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், கட்டடத் தொழில் நிமித்தம் இவர்கள் சில மாதகாலமாக மயிலம்பா வெளியில் தங்கியிருந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தொழிலாளர்கள் தங்கியிருந்த வீட்டினுள் பிரவேசித்த ஆயுதபாணிகள் இவர்கள் மீது (04 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மிதிவெடி விழிப்புணர்விற்கும் பங்களிப்புக்குமான சர்வதேச தினம் - ஏப்ரல் 04

சர்வோதயம் (A/48853) யுனிசெவ்

யா/ஊரெழு கணேச வித்தியாசாலை
பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

காலம் - 06.04.2007 வெள்ளிக்கிழமை
நேரம் - காலை 9.30 மணி
இடம் - பாடசாலை பிரதான மண்டபம்

இப்பாடசாலையில் கல்வி கற்ற அனைத்து பழைய மாணவர்களும் தவறாது கூட்டத்திற்கு சமுகமளித்து சங்கத்தினை உதயமாக்கி அங்கத்தவராகும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சி.திரிகரன் தலைவர் | ந.ச.ஜெயதீஸ்வரன் செயலாளர் | பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
(48854)

கண்ணீரில் கரைந்துபோன நான்கு ஆண்டுகள்

அகம் மகிழ 08 - 08 - 1985
அகம் துடிக்க 03 - 04 - 2003

அமரர் மரியதாஸ் பிரதீபன்

(யாழ்.ஹென்றியரசர் கல்லூரி, கணிதப்பிரிவு - 2004)

எங்கள் அன்பின் உயிரே பிரதீபா
நீ மறைந்து ஆண்டுகள் நான்கு சென்றுவிட்டதையா
இன்னும் எம் மனக்கண்ணில் உயிரோடு நீ
எம் நெஞ்சில் நீ பதித்த
நினைவுகளுடன் வாழ்ந்து கொண்டிருக்கும்.

பக்கஸ் லேன்,
(அல்பா மிக்சர் லேன்)
மானிப்பாய்.

- குடும்பத்தினர்.
(A/50873)

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 01 . 04 . 1929
மறைவு 04 . 03 . 2007

அமரர் இளையதம்பி சண்முகராசா

(அன்னார் காலஞ்சென்றவர்களான சுதுமலையைச் சேர்ந்த இளையதம்பி - பார்வதியின் மகனும், காலஞ்சென்றவர்களான இணுவில் கிழக்கைச் சேர்ந்த முத்தையா - செல்லம்மாவின் மருமகனுமாவார்).

பண்பின் பிறப்பிடமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் அவனியில் பெருமகனாய்
எமதுள்ளத்தில் நிலைபெற்ற இதய தெய்வமே!
எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி
மீளாப் பயணம் சென்றாயோ!
இப்புவியில் நாம் உள்ளவரை எம் உள்ளங்களில்
உம் நினைவு என்றும் அழியாது!

தகவல்: இராசதுரை - சுதர்ஜன் (கோபு), மனைவி, மக்கள், மருமக்கள், மஞ்சத்தடி, இணுவில். (59222)

உமது பிரிவால் வாடும்: பேரப்பிள்ளைகள்.

யா/ மாணிக்கவாசகர் வித்தியாலயம் - கரவெட்டி
மதிப்பளித்தல் தினம்

நாள் - நாளை(04.03.2007) புதன்கிழமை பிற்பகல் 2 மணி
இடம் - பாடசாலை சின்னத்தம்பி மண்டபம்
பிரதம விருந்தினர் - **உயர் திரு. வ.செல்வராசா**
(கல்விப் பணிப்பாளர் - வடமராட்சி வலயம்)

புலமைப்பரிசில் பரீட்சை - 2006

தோற்றியோர்	நாறு புள்ளிக்கு மேல் புள்ளி பெற்றவர்கள்	சித்தியடைந்தவர்கள்
40	33	15

சித்தியடைந்த மாணவர் விவரம்

01) பாஸ்கரன் இலக்சனா	- 162	02) பரமேஸ்வரன் கபிலாஸ்	- 152
03) லிங்கரட்ணம் விதுர்சா	- 150	04) ஜெகநாதன் வசீகரன்	- 147
05) நந்தகுமார் விதுர்சா	- 146	06) இரவீந்திரன் கிரிதர்	- 145
07) முருகானந்ததாஸ் பாவலன்	- 145	08) நல்லைநாதன் டினேஸ்	- 145
09) செல்வகுமார் ஊர்மிளா	- 145	10) பாலசிங்கம் பாலாஜினி	- 139
11) கைலாசநாதன் பானுகோபிகன்	- 139	12) மகேசன் விக்னரூபன்	- 138
13) கிருஸ்ணமூர்த்தி ஜனகன்	- 138	14) துரைசிங்கம் பிரதிகா	- 135
15) பாலசுந்தரம் ஜெயந்தன்	- 134		

தமிழ்த்தினப் போட்டி - 2006

மாவட்ட நிலை

எழுத்தாக்கம்	பாஸ்கரன் இலக்சனா	முதலாம் இடம்
இசையும் அசைவும்	சிவலோகநாதன் நிசாங்கனி	முதலாம் இடம்
பேச்சு	முருகானந்ததாஸ் பாவலன்	மூன்றாம் இடம்

சைவ பரிபாலன சபை - 2006

பாலசிங்கம் பாலாஜினி - தங்கப்பதக்கம் - தரம் 4

மதிப்புப் பெறும் இம்மாணவச் செல்வங்களை வாழ்த்துவதுடன் இவ்வித்தியாலயத்தின் கல்விச் சாதனைகள் மேலும் சிறப்புற வாழ்த்துவதுடன் இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(A/48860)

பெற்றோர்கள்.

தவறிவிட்டது

ஞானவைரவர்லேன், கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த மகாலிங்கம் அசோக்குமார் என்பவரது தேசிய அ.அட்டை (இல.791312477V), விசேட அ.அட்டை(0902003378) மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், ரக்ஸ் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பேர்ஸ் கோண்டாவில் நாகபூஷணி அம்மன் கோயில் அருகில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராசமணி களஞ்சியம், தாவடி வீதி, கோண்டாவில் கிழக்கு அல்லது மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொ.பே. 0776176866 (59237)

தவறிவிட்டது

சாவகச்சேரி, பொன்னுச்சாமி வீதியைச் சேர்ந்த துரை சிங்கம் சற்குணநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (751082568V) விசேட அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம், மோட்டார் சைக்கிள் பாஸ், கொழும்பு பயண அனுமதிப்பத்திரம், கொமர்ஷல் வங்கி அட்டை ஆகியவை அடங்கிய பேர்ஸ் சாவகச்சேரி ஐங்கரன் பேக்கரிக்கும் கண்டி வீதிக்குமிடைப்பட்ட கண்டுவில் ஒழுங்கையில் கடந்த 28.02.2007 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(A/48859)

கண்ணீர் காணிக்கை

வலி.வடக்குப் பிரதேச சபை, தெல்லிப்பழை உப அலுவலக நூலகத்தில் கடமையாற்றும்
இ.நாகவேல்ராசா
அவர்களின் ஏக புத்திரி

செல்வி டயானி நாகவேல்ராசா

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலி. வடக்குப் பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).
(A/48856)

கண்ணீர் அஞ்சலி

ஏமது கல்லூரியில் ஏம்முடன் கடமையாற்றிய
துரைசிங்கம் தேசியநாதனின்
திடீர் மறைவையிட்டு நாம் மிகுந்த துயரம் அடைவதுடன்,
அன்னரின்
பிரிவினால் துயரில் முழ்கியிருக்கும் குடும்பத்தினரின் சோகத்தில் நாமும் பங்குகொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விசாரா ஊழியர்கள்,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.
(59252)

தவறிவிட்டது

46, மலர்மகள் வீதி, அரியாலை என்னும் முகவரியுடைய டேவிற் கஜிந் என்பவரது தேசிய அ.அட்டை (853333000V), விசேட அ.அட்டை (0902010969) என்பன 30.03.2007 அன்று அரியாலைப் பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி மகேஸ்வரி பராஜசிங்கம்

தோற்றம் 10.09.1936 மறைவு 21.03.2000

திதி : 03.04.2007

ஏழு ஆண்டுகள் ஆனதம்மா
எண்ணித் தினமும் ஏங்குகின்றோம்
ஏழு ஜென்மம் என்றிருந்தால்
என்றும் எங்கள் அன்னை நீங்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டிநிற்கும்

இ.பராஜசிங்கம்,
82/1, செட்டித் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(59205)

கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நன்றி நவில்தல்

எம் இதயத் தெய்வம்
திருமதி
லியோனா யூலியற்றாணி
பசில்ராஜ்குமார் (ஆசிரியை)

அவர்களின் பிரிவுத் துயரில் நேரில் பங்குகொண்ட அருட் தந்தையர்கள், அருட்சகோதரிகள், நீதியாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள், கல்வி சாரா ஊழியர்கள், பிரதேச செயலர்கள், சிரேஷ்ட பொறியியலாளர்கள், தொழில்நுட்ப அதிகாரிகள், ஊழியர்கள், கூட்டுறவு நிறுவன உத்தியோகத்தர்கள், பணிப்பாளர்கள், கிராம சேவை உத்தியோகத்தர், பணியாளர்கள், பருத்தித்துறை பங்கு மக்கள், புனித அந்தோனியார் ஆலய சனசமூக நிலைய, கணனி கல்வி நிலைய ஆசிரியர் சமூகம், குழந்தை யேசு செபக்கூட அன்பர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மேலும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த பிரதிச் செயலாளர், மாகாணப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர், பொறியியலாளர்கள், அதிபர், ஆசிரியர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அத்துடன் பத்திரிகை மூலமும், துண்டுப்பிரசுரங்கள், தந்திகள் மூலமும் அனுதாபச் செய்தி வெளியிட்ட அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பி.பசில்ராஜ்குமார்(கணவர்),
சி.ஜோ.கொல்விக்ர்(சகோதரன்).
(59240)

மரண அறிவித்தல்

குணரத்தினம் பூபாலசிங்கம்

உடுவில் கிழக்கு, கற்பகப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, 55ஆம் கட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் பூபாலசிங்கம் 01.04.2007 ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சியில் காலமானார்.

அன்னார் குணரத்தினம் - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரத்தினம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சித்திரவதனியின் அன்புக் கணவரும், றதீசா (கிளிநொச்சி), றதீசன்(கனடா) றமணன், ராகுலன், ராதிகா, டாலி, ராஜா ஆகியோரின் அன்புத் தந்தையும் உதயகுமார்(அகிலன்) அவர்களின் மாமனும் தங்கேஸ்வரி, பாலபூபதி, சிறிகாந்தன், சிவராஜா (கனடா), தர்மதுரை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற அரியராசா மற்றும் பாலசிங்கம், சத்தியராணி, இராயலச்சுமி, ரேவதி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 01.04.2007 ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் கிழக்கு,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
சுன்னாகம்.
(59251)

தகவல்:
கு.தர்மதுரை (ராசாத்தி).

நீங்காத நினைவலைகள்

முதலாம் ஆண்டு

மலர்வு 21 ★ 09 ★ 1923
உதிர்வு 15 ★ 03 ★ 2006

ஓவியச் செல்வன், ஓவியச்சுடர்மணி, ஓவியப் பேரோளி, ஓவியக் கலைச்செம்மல், குகஸ்ரீ, கலைஞானக்குடர், கலாபூஷணம்

பெரியதம்பி சுபரிரமணியம்
(ஆர்ட்டிஸ்ற் மணியம்)

ஓவியக் கலையில் உயர்ந்து விளங்கிக்
காவியம் படைத்த கற்பனைச் சுரங்கமும்
ஐரோப்பிய நாட்டில் இசைக்கருவிகளை இயக்கி
இன்னிசை அழுதூட்டிய இசையருவியும்
எமக்கும் மருமகனும் ஆகியவர்களே!
ஏங்கள் மனங்களில் என்றும் நீவிர் நிலைத்திருப்பீர்!

நல்லூர். (59172)

உங்கள் நினைவுகளுடன்: குடும்பத்தினர்.

மூன்றாம் மாதம்

மலர்வு 20 ★ 09 ★ 1944
உதிர்வு 30 ★ 12 ★ 2006

இசையரசன், இசைச்சக்கரவர்த்தி

எஸ்.கே.பஞ்சரட்ணம் (பஞ்)
(உரிமையாளர் - "கலைவாணி" இசைக்குழு, திருகோணமலை, 'ஹைற்றோன்', ஐரோப்பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

யுத்த நிறுத்தத்தைத் தொடர்வதா ? தெற்கே தீர்மானிக்க வேண்டும்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாட்டின் எதிர்காலம் குறித்துத் தீர்மானிப்பதற்காக, அது தொடர்பாக சர்வஜனவாக் கெடுப்பு ஒன்று நடத்தினால் என்ன என்பது பற்றி அரசுத் தலைமை ஆராய்ந்து வருவதாக ஒருபுறத் தில் செய்தி வெளியாக -

மறுபுறத்தில், ''யுத்த நிறுத்த உடன்பாட்டைப் பேணுவதற்கு அரசு விரும்பாவிட்டால், அமைதிப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வாய்ப்பேயில்லை. அதேவேளை மோசமான போரும் வெடிக்கும்.'' - என்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பா ளர் சு. ப. தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் என்றதகவலும் வெளியாகியிருக்கின்றது.

''யுத்த நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையில் இனிமேல் நாங்கள் பேச்சைத் தொடரலாம் என்று நான் நம்பவில்லை'' - என அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் நாயகமும், இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளருமான பாலித கொஹன தெரிவித்தார் என்று செய்திகள் வெளியான பின்னணியிலேயே, யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்த அரசின் உத்தேசம் பற்றிய செய்தியும் கசிய விடப்பட்டிருக்கின்றது.

இத்தகவல்களின் பின்புலத்தில் அமைந்திருக்கக்கூடிய இரண்டு விடயங்களை இலகுவாகவே ஊகித்துக் கொள்ள முடியும்.

ஒன்று - யுத்தத் தீவிரத்தில் செயற்படும் மஹிந்தரின் அரசு முழு யுத்தத்துக்குத் தயாராகிவிட்டது. அதனால் யுத்த நிறுத்தமும் அதற்கு கசக்கத் தொடங்கிவிட்டது. இப்போது அதிலிருந்து முழு அளவில் வெளியே வருவதற்கான - சர்வதேச சமூகத்தைத் திருப்திப்படுத்தக் கூடியதான - வலுவான காரணத்தை அது தேடுகின்றது. எமது நாட்டுமக்களின் விருப்பப்படியே - ஆணைப்படியே - யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை முறித்து, அதிலிருந்து வெளியே வந்தோம் என்று கூறுவதன் மூலம் சர்வ தேசக் கண்டனங்கள், அழுத்தங்களிலிருந்து தம்மையும் தமது அரசையும் விடுவித்துக் கொண்டு, முழு யுத்தத்துக்குச் செல்லலாம் என மஹிந்தரின் அரசுத் தலைமை கணக்குப் போடுகின்றது போலும். அதற்கான ஆரம்பக் காய் நகர்த்தலாகவே இச்செய்தி கசிய விடப்பட்டிருக்கின்றது.

அடுத்தது - 'சார்க்' உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்தரும் அவரது அணியினரும் புதுடில்லி புறப்பட்டுச் செல்ல விருக்கையில், அவரது அரசின் ஊது குழலாக இருக்கும் அரசு சார்பு ஞாயிறு வார இதழில் உத்தேச சர்வஜன வாக்கெடுப்புத் திட்டம் பற்றிய தகவல் முற்பக்கப் பிரதான தலைப் புச் செய்தியாகப் பிரசுரிக்கப்பட்டு, அத்தகவல் கசிய விடப்பட்டிருக்கின்றது.

அரசின் தீர்மானத்தை - முடிவை - திட்டவட்டமாக அறிவித்து, அதன் பின்னர் சர்வதேச சமூகத்தின் கடும் எதிர்ப்பு அத்திட்டத்துக்கு எதிராகக் கிளம்பி, அதன் காரணமாக அதனை இடைநடுவில் கைவிடுவதை விடுத்து, ஓர் ஊகச் செய்தியாக அத்தகவலைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டு, அது தொடர்பாகப் புதுடில்லி அரசு அதிகாரிகளின் பிரதிபலிப்புகளை புதுடில்லியில் அவதானமாகப் பெற்றுக்கொண்ட அந்த உத்தேசத்திட்டம் குறித்து இறுதி முடிவெடுக்கலாம் என்பது ஜனா திபதி மஹிந்தர் வகுத்த தந்திரோபாயமாக இருக்கலாம் என்று கூறப்படுகின்றது.

அதனால்தான் புதுடில்லிக்கு மஹிந்தரின் அணி புறப்படவிருக்கையில் இச் செய்தி அரசு சார்பு ஊடகம் ஊடாக அவிழ்த்து விடப்பட்டிருக்கின்றது. செய்தி வெளியான நேரமும், முறையும் இந்த நோக்கத்தை உறுதிப்படுத்துகின்றன.

அமைதிப் பேச்சு நடத்துவதானால் அதற்கான சூழ்நிலை களத்தில் பேணப்படவேண்டும். அதற்கு யுத்த நிறுத்த உடன்பாடு முழு அளவில் - நூறு சதவீதம் - நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் - இதுவே இந்த யுத்த நிறுத்தம் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்து தமிழர் தரப்பின் ஏகோபித்த - ஏக - நிலைப்பாடாக இருந்து வருகின்றது.

ஆனால் ஜனாதிபதி மஹிந்தரின் அரசு பதவியேற்றதிலிருந்து, இந்த அடிப்படை நிலைமை புறக் கணிக்கப்பட்டு, அதற்கு மாறான செயற்பாடுகளே தென்னிலங்கையால் முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தொடர வேண்டுமா, இல்லையா என்பது குறித்துத் தமிழ் மக்களின் கருத்தை, சர்வஜன வாக்கெடுப்பு நடத்தித்தான் இனிமேல் அறிய வேண்டும் என்பதல்ல. அவர்களின் முடிவும் தீர்மானமும் வெளிப்படையானவை; மாற்றமில்லாதவை.

அமைதி வழியில் - சமாதான முறையில் - தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனத் தென்னிலங்கை கருதுமானால் யுத்த நிறுத்த ஒப்பந்தம் முற்றும் முழுதாக - வார்த்தைக்கு வார்த்தை - சொல்லிலும் செயலிலும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். அமைதி முயற்சிகளில் இதய சுத்தியுடன் அரசுத் தலைமை ஈடுபட வேண்டும்.

அப்படி அமைதி வழித் தீர்வில் தென்னிலங்கைக்கு நாட்டமில்லை எனின், யுத்த நிறுத்த உடன்பாட்டின் அமுலாக்கம் குறித்து அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

இதுவே தமிழர் தரப்பின் ஒரே நிலைப்பாடு.

ஆகவே யுத்த நிறுத்த உடன்பாடு தேவையா, அது தொடரப்படவேண்டுமா - என்பதையெல்லாம் தீர்மானிக்க வேண்டியது கொழும்புதான்; தென்னிலங்கைதான்.

தென்னிலங்கை அரசுத் தலைவர் என்ற முறையில் இவ்விடயத்தில் எவ்வாறு முடிவெடுப்பது என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர் ஜனாதிபதி மஹிந்தரே. தாமே முடிவு செய்வதா, தமது மக்களிடம் தாம் கேட்டு - விசாரித்து - கருத்து அறிந்து - தெளிந்து கொள்வதா, தெரிந்து கொள்வதா என் பதை அவரே தீர்மானிக்க வேண்டும்.

தமிழர் தாயகத்துக்கு இதில் முடிவு செய்ய எதுவுமே இல்லை.

நகரை அண்டிய அத்தியடியில் ஆயுததாரிகள் பட்டப்பகலில் கொள்ளை!

யாழ்ப்பாணம்,ஏப்.3

யாழ்.நகரை அண்டிய அத்தியடிப்பகுதியில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் - பட்டப்பகலில் - வீடு ஒன்றில் புகுந்தவர்கள் அங்கிருந்து நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

நண்பகலில் வீட்டுக்குள் ஆயுதங்களுடன் வந்த நபர்கள் தங்களை புலனாய்வுப் பிரிவினர் என அறிமுகம் செய்துகொண்டு வீட்டைச் சோதனை செய்யப் போவதாகக் கூறியுள்ளனர்.

ஆயுதங்களுடன் வந்த அவர்கள், அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி வீட்டைச் சோதனை செய் தனர்.

சோதனை முடிவடைந்து அவர்கள் சென்ற பின்னர், வீட்டில் இருந்த நகைகள், கமெரா, கைத்தொலைபேசி ஆகியன காணாமல் போயுள்ளமை தெரியவந்துள்ளது.

அபகரித்துச் செல்லப்பட்ட பொருள்களின் பெறுமதி சுமார் 2லட்சம் ரூபா எனத் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

படையினரின் போக்குவரத்து இனி தொண்டைமானாறு பாலத்தினூடாக

உடுப்பிட்டி,ஏப்.3

இராணுவத்தினர் தமது போக்குவரத்திற்காக வல்லைப்பாலத்திற்கு பதிலாக தொண்டைமானாற்றுப் பாலத் தை பயன்படுத்தவுள்ளனர். அதன்பொருட்டு புனரமைப்புப் பணிகளைத் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

இப்போது இராணுவத்தினரதும் பொதுமக்களினதும் வாகனங்கள் வல்லைப் பாதையூடாகவே போக்குவரத்தை மேற்கொண்டு வருகின்றன. இதனால் போக்குவரத்தில் பெரும் நெரிசல் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையைத் தவிர்ப்பதற்காக படையினரின் போக்குவரத்தைத் தொண்டைமானாற்றுப் பாலம் ஊடாக மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கென அந்தப் பாலத்தின் புனரமைப்புப் பணிகளை படைத்தரப்பினர் ஆரம்பித்துள்ளனர். (அ- 202-155)

மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.3

கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயத்தில் பல்வேறு பரீட்சைகளில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய சின்னத் தம்பி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் இ. இராகவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா கலந்துகொள்வார்.

வித்தியாலயத்திலிருந்து கடந்த வருடம் நடைபெற்ற 5ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும் தமிழ்த் தினப்போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களும் சைவபரிபாலன சபை நடத்திய போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற மாணவர்களும் கௌரவிக்கப்படவுள்ளனர். (1-202)

வடமராட்சி, வலிகாமம் கல்வி வலயங்களுக்கு பகுதிநேர ஆங்கில ஆசிரியர்

யாழ்ப்பாணம், ஏப்.3

வடமராட்சி, வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இதற்கான விண்ணப்பங்களைக் கல்வி வலயங்கள் கோரியுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரண பரீட்சையில் ஆங்கில பாடத்தில் விசேட சித்தியுடன் ஜி.சீ.ஈ. உயர்தரத்தில் சித்தியடைந்தவர்கள் இந்தப் பதவிக்கு விண்ணப் பிக்க முடியும்.

வடமராட்சி வலயத்தில் எதிர்வரும் 5ஆம் திகதிக்கு முன்னரும் வலிகாமம் வலயத்தில் எதிர்வரும் 16ஆம் திகதிக்கு முன்னரும் விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (1-202)

ஆசிரிய மாணவரின் கண்காட்சி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளின் போது அவர்கள் உருவாக்கிய ஆக்கங்களின் கண்காட்சி இன்று செவ்வாய்க் கிழமையும், நாளை புதன்கிமை யும் கலாசாலையில் நடைபெற உள் ளது. கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ் கந்தமூர்த்தி இத்தகவலைத் தெரிவித்துள்ளார். (1-203)

நாளை

பங்குனி - 21
புதன்கிழமை
04.04.2007
திதி: துதியை
பின்னிரவு : 02.49
நட்சத்திரம்: சித்திரை
முற்பகல் : 10.38
சுபநேரம் : 04.40 - 06.10
ராகுகாலம் : 12.10 - 01.40

வடமராட்சிக் கடலில் மீன்பிடிக்க படையினர் மீண்டும் தடைவிதிப்பு

உடுப்பிட்டி, ஏப்.3

வடமராட்சிக் கடலில் மீன்பிடிப்பதற்குக் கடந்த மூன்று தினங்களாக படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

குடத்தனை முதல் வல்வெட்டித்துறை வரையான கடற்பகுதியில் ஒரு மைல்தூரத்துக்கு மீன்பிடிப்பதற்கு கடந்த 22ஆம் திகதி படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

எனினும் கடந்த 31ஆம் திகதி முதல் மீண்டும் மீன்பிடிக்கப்படையினர் தடைவிதித்துள்ளனர்.

ஒரு சில இடங்களில் கரைக்கச் சமீபமாக மீன்பிடிப்பதற்கு அனுமதித்த போதிலும், சில மணி நேரத்தில் திரும்புமாறு தாம் கேட்கப்பட்டதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். (1-155)

ஆனைக்கோட்டையில் இன்று சமுர்த்தி முத்திரை விநியோகம்

நவாலி,ஏப்.3

ஆனைக்கோட்டை ஜே/133 கிராமசேவையாளர் பிரிவைச் சேர்ந்த சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுக்கான முத்திரைகள் இன்று கிராமசேவையாளரின் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலரினால் வழங்கப்படவிருக்கும் இந்த முத்திரைகளை நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கிராமசேவையாளர் ச.சந்திரராசா கேட்டுள்ளார். (1-100)

கடல் அனுமதிப்பத்திரங்கள் படையினரால் ஒப்படைப்பு

குருநகர்,ஏப்.3

குருநகர் மீனவர்களின் கடல் அனுமதிப்பத்திரங்களை படையினர் திரும்பக் கொடுத்துள்ளனர்.

விதிக்கப்பட்ட கடல் எல்லையை மீறி, குடாக்கடலில் தொழிலில் ஈடுபட்டனர் எனத் தெரிவித்து குருநகர் மீனவர்களின் கடல் அனுதிப்பத்திரங்கள் முன்னர் பறிமுதல் செய்யப்பட்டன. அவற்றை இப்போது மீனவர்களிடம் திரும்பக் கொடுத்துள்ளனர்.

கடற்றொழிலாளர் சங்க வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. (அ-1-51)

அம்பாறையில் நேற்று....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸ்ஸில் இருந்து இறக்கினர். அந்த வேளையிலேயே பெரும் ஓசை யுடன் குண்டு வெடித்தது என்று கூறப்படுகிறது.

பயணிகளைச் சோதனையிடும் பணியில் ஈடுபட்ட படைச்சிப்பாய் ஒருவரும், பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரும் கூட இந்தக் குண்டு வெடிப்பில் சிக்கி உயிரிழந்தனர் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

உயிரிழந்தவர்களில் 14 பேரின் உடல்கள் அம்பாறை மருத்துவ மனையில் வைக்கப்பட்டுள்ளன.

பெருமளவு இராணுவத்தினரும் பொலிஸாரும் சம்பவம் நடந்த இடத்துக்கு அம்புலன்ஸ் வண்டிகளுடன் விரைந்தனர்.

படுகாயங்களுடன் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த பலரும் அம்புலன்ஸ்களில் ஏற்றப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு விரையப்பட்டனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சமயம் மூவர் உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர் என்றும், ஏனைய 13 பேரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபின் உயிரிழந்தனர் என்றும் அம்பாறை மருத்துவமனை வைத்திய அதிகாரி லங்காதிலக ஜெயசிங்க தெரிவித்தார்.

சுமார் 25 பேருக்கு அங்கு அவசர சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது.

குண்டுவெடிப்பில் சிக்கிய பஸ் பலத்த சேதமடைந்து காணப்பட்டது.

குண்டு பஸ்ஸின் உள்ளே வெடித்ததா அல்லது வெளியே வீதியோரக் கண்ணிவெடியில் பஸ் சிக்கியதா என்பது தொடர்பாகப் பாதுகாப்பு அதிகரிகள் மத்தியில் முதலில் குழப்பம் ஏற்பட்டது. எனினும் சக்திவாய்ந்த வெடிகுண்டு ஒன்று பஸ்ஸில் பொதிகள் வைக்கும் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது என்று பின்னர் அவர்கள் தெரிவித்தனர். எனினும் இது தொடர்பாக விசாரணைகள் இடம் பெற்று வருகின்றன என்று அம்பாறை பகுதி பாதுகாப்பு உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

விடுதலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்படும் இந்தக் குற்றச்சாட்டுகளை விடுதலைப் புலிகள் அடியோடு நிராகரித்திருக்கிறார்கள்.

இதுபோன்ற குண்டுத் தாக்குதலை நடத்தவேண்டிய அவசியம் எமக்கு இல்லை. விடுதலைப் புலிகள் மீது பழிபோடுவதற்காக அரசுப்படைகள் அல்லது அவர்களோடு சேர்ந்து இயங்கும் துணைப்படைகள் திட்டமிட்டு இப்படி ஒரு குண்டு வெடிப்பை நடத்தியிருக்கலாம் - என்று விடுதலைப் புலிகளின் மனிதஉரிமைகள் மற்றும் மனிதாபிமான விடயங்களுக்கான பேச்சாளர் நவரூபன் செல்வி கிளிநொச்சியிலிருந்து தொலைபேசியில் வெளிநாட்டு செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்திருக்கிறார். (சி)

வங்கிகள் இன்று திறந்திருக்கும்

யாழ்ப்பாணம், ஏப்.3

இன்று குடாநாட்டில் எல்லா வங்கிகளும் இயங்கும். முகமது பிறந்த நாளையொட்டிய விடுமுறை இம்மாதம் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றைய தினம் வழமையான விடுமுறை என்பதால் அதற்குப் பதிலீடாக இன்று மூன்றாம் திகதி விசேட வங்கி விடுமுறையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனினும், ஏற்கனவே அடுத்தடுத்து மூன்று நாள்கள் வங்கிகள் திறக்கப்படாததால் இன்று அவை திறந்து அலுவல்கள் வழமைபோல் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (அ)

கொய்யாத்தோட்டத்தில் இளைஞன் கடத்தல்

யாழ்ப்பாணம், ஏப்.3

கொய்யாத் தோட்டம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டார் என்று யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று அவரது உறவினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இல. 43, புதிய வீதி, கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் கமில்ரன் (வயது 17) என்பவரே இவ்வாறு கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (1-4)

கல்வியியற் கல்லூரிக்கு தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம், ஏப்.3

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு ஆங்கில மூல கணித பாட நெறிக்குத் தெரிவான மாணவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தெரிவு செய்யப்பட்டவர்கள் கல்லூரியில் தமது அனுமதிக் கடிதத்தையும் படிவங்களையும் பெற்று எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர் விவரம் வருமாறு:

பீ.அரவிந்தன்(உடுப்பிட்டி), கே.சிவராசா (பருத்தித்துறை), ஆர். கீர்த்திகா (கோப்பாய்), கே.கார்த்திகா (நீர்வேலி), எஸ்.சந்திரகாந் (அரியாலை), ஏ.பிரசாந்தன் (நெல்லியடி), ஆர்.சுகாசினி (சாவகச்சேரி).

ஜெ.பிரதிராஜ் (ஆனைக்கோட்டை), ஏ.சுபாசுரன் (துன்னாலை), ரி.கோபனா (கொழும்பு-6), எஸ். ரஜிதா (பருத்தித்துறை), எஸ்.சுஜித்தா (சண்டிலிப்பாய்), எஸ்.துளசிகாயினி (சுன்னாகம்). (202)

கிராமியச் செயலகங்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் கிராமிய செயலகங்கள் அமைக்கப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கரு ஜெயசூரியா மேற்கொண்டுள்ளார்.

அமைச்சில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற தேசிய மட்ட கிராம உத்தியோகத்தர்களின் தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

சந்திப்பின் போது உடன் நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சரால் உறுதியளிக்கப்பட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கான நலத்திட்டங்கள் வருமாறு -

- கிராம உத்தியோகத்தர்களுக்கான இடர்காலக் கொடுப்பனவில் நிலுவைப் பணத்தை உடன் வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- சம்பளத் திட்டத்தை உயர்த்துதல்.
- வன்செயல் காரணமாக உயிரிழந்த உத்தியோகத்தர்களின் குடும்பங்களுக்கு உடன் நட்டஈடு வழங்குதல்.
- தரமான உத்தியோக இலச்சினை வழங்குதல்.
- 50 வீதம் மானிய அடிப்படையிலும் 50 வீதம்கடன் அடிப்படையிலும் கிராம சேவகர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்குதல். (அ-202)

மீனவர்களுக்கு தொழில் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், ஏப்.3

குடாநாட்டு கடற்றொழிலாளர்களின் தொழிலை மேம்படுத்துவதற்கென 80 லட்சம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்கள் கொழும்பிலிருந்து யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் தருவிக்கப்படவுள்ளன.

கப்பல் மூலம் எடுத்துவரப்படவுள்ள இந்த உபகரணங்கள் பிரதேச கடற்றொழிலாளர் சங்கங்கள் ஊடாக தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படும் என சமாசத்தின் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார். (அ-4-202)

இந்து குருமார்களுக்கு விசேட அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,ஏப்.3

குடாநாட்டின் பிரதான வீதிகளில் போக்குவரத்துத் தடைகள் நடைமுறைப்படுத்தப்படும் நேரங்களில் இந்து சமயக் குருமார்கள் தாமதமின்றி ஆலயங்களுக்குச் செல்வதற்கு வசதியாக விசேட அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கான ஏற்பாடுகளை யாழ். அரச அதிபர் கே.கணேஸ் மேற்கொண்டுள்ளார்.

இந்து சமயக் குருமார்கள் தத்தம் பிரிவு பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பதிவு செய்யுமாறு யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார். (202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அந்தியேட்டி, சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 04.03.2007- ஞாயிற்றுக்கிழமை அமரத்துவம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர் இராமநாதன் பரமலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் 03.04.2007 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு நயினாதீவு கெங்காதரணி புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிரியைகள் அன்று மு.ப 11 மணிக்கு அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் தங்களைக் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இத்துடன் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் மற்றும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
நயினாதீவு - 05. (59263) பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

6ஆம் மாத நினைவஞ்சலி

எமது நண்பன்

இ.அகிலன் அவர்களின் அன்புத் தந்தை

சம்பந்தர் இரத்தினசிங்கம்

பாசமுடன் பார்த்திருந்து
பாசமுகம் மறைந்தின்று
மாதங்கள் ஆறு ஆனதப்பா
ஆறாத் துயரில் ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்டீரே
ஆறவில்லை எம் துயரம்
ஆறுதல் அடைய வேண்டுகின்றோம்.

தோற்றம் 10.05.1930
மறைவு 04.10.2006

(59255) தென்மராட்சி நண்பர்கள்.

2ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

கதிர்காமு சந்திரலிங்கம்

தோற்றம் 05.03.1952 மறைவு 26.03.2005

அன்பூட்டி அறிவூட்டி, அரவணைத்த எம் அன்புத் தந்தையே! ஆண்டுகள் இரண்டு அணைந்தாலும் ஆறவில்லை எம் துயரம்.

(59243)

கற்குளம் வீதி,
கோட்டடி, யாழ்ப்பாணம். அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

870 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம்

18 36 40 48

30-03-2007

செல்லுபடியாகும் தொடர் இல. 5822713 - 5837834

ஜக்பொட் பரிசு ரூபா. 1,000,000/- வெல்லப்படவில்லை

இணையும் இலக்கங்கள்	வெற்றியாளர் எண்ணிக்கை	பரிசுத் தொகை	மொத்தம்
1 இலக்கம்	332,355	10/-	3,323,550/-
2 இலக்கங்கள்	30,530	20/-	610,600/-
1 இல. + லக்கினம்	30,220	30/-	906,600/-
2 இல. + லக்கினம்	2,781	100/-	278,100/-
3 இலக்கங்கள்	802	500/-	401,000/-
3 இல. + லக்கினம்	77	5,000/-	385,000/-
4 இலக்கங்கள்	5	100,000/-	500,000/-
4 இல. + லக்கினம்	-	1,000,000/-	-
மொத்தம்			6,404,850/-
முச்சக்கர வண்டிகளின் பெறுமதி	5	204,700/-	1,023,500/-
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை	396,775		7,428,350/-

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,742,300/-

தொடர் இல.495467 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2007 ஏப்ரல் 05 ஆம் திகதி செல்லாக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் லீத், கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

இரத்தினபுரி	5823735-6-30
களுத்துறை	5834019-0-34
மாத்தறை	5828650-4-24
மொனராகலை	5834725-8-89
குருநாகல்	5829486-5-17

தமிழ்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறியத் தருவது என்று முடிவு செய்யப்பட்டது.

மக்களின் அவல நிலைக்கு தீர்வு காணசர்வதேசத்தின் பங்களிப்பையும் உதவியையும் கோருவதெனவும் முடிவாகியது. சர்வதேச நாடுகளின் தூதர்களை நேரில் சந்தித்து தமிழ் மக்களின் அவலங்களை எடுத்துக்கூறி மக்களுக்கு நிவாரணம் பெற்றுத்தர ஏற்பாடு செய்வது என்றும் முடிவு செய்யப்பட்டது. (அ-1)

ஆஸ்திரேலியாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழுந்த ராட்சத அலைகள் தாக்கியது சாலமன் ஔவில் மேற்கு கடலோர தாழ்வான கிராமங்களில் கடல்நீர் புகுந்தது. சில இடங்களில் நிலச்சரிவும் ஏற்பட்டது.

இந்தநில நடுக்கம், சுனாமி மற்றும் நிலச்சரிவுகளில் 3 பேர் பலியாகினர். இன்னும் 4 பேரைக் காணவில்லை. அவர்களும் சுனாமி பேரலைகளில் இறந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து பசிபிக் கடல் பகுதியில் உள்ள சுனாமி எச்சரிக்கை மையத்தில் இருந்து அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நாடாளு... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர் கடந்த வெள்ளிக்கிழமை விசாரிக்கப்பட்ட பின்னர் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 1.30மணிக்கு மீள ஆஜராக வேண்டும் என்று முன்பு புலனாய்வுப் பிரிவினர் கேட்டிருந்தனர். (அ-1)

கன்னியா... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாகர்கோயில் மாவட்ட ஆட்சியர் அலு வலகம் முன் மீனவர்கள் கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டங்களில் முன்னாள் அமைச்சர்களான ய் சுந்தரம், தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தின் முடிவில், கோரிக்கைகள் அடங்கிய மகஜர் மாவட்ட ஆட்சியர் சுவர்ணாவிடம் கையளிக்கப்பட்டது. (அ-1)

அரசியல் - இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக, இந்தியாவில் நடைமுறையில் உள்ள சமஷ்டிசார்ந்த வடிவத்தையும், ஏனைய அதிகாரப் பகிர்வு வடிவங்களையும் நாம் இப்போது பரிசீலனை செய்து வருகிறோம்.

★ விடுதலைப் புலிகள், ஆயுதங்களை வாங்கிக்குவித்து போர்நிறுத்தஒப்பந்தத்தை மீறி வருகின்றனர். புலிகள் தமது ஆயுத பலத்தைப் பெருக்குவதற்கான ஒரு 'மன்னிப்பே' போர்நிறுத்த ஒப்பந்தம்.

★ எனினும் ஜனாதிபதி ராஜபக்ஷ தலைமையில் உள்ள எமது அரசாங்கம் அவர்களைப்பேச்சுவார்த்தையில் ஈடுபடவைப் பதற்கான சகல முயற்சிகளையும் செய்து கொண்டே இருக்கிறது.

★ அவர்கள் பேச்சுவார்த்தை மேசைக்கு வருவதற்கு உதவும் விதத்தில், சர்வதேசம் அவர்களின் நிதி திரட்டும் வழிகளைத்தடுத்து உதவவேண்டும். (அ)

இலங்கைக் கடற்பரப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலிக்கும் தவளைக்கும் இடையிலான ஒரு சேர்க்கையாக இந்தக்கூட்டு ரோந்து அமைந்துவிடக்கூடாது. கூட்டு ரோந்து என்பது சந்தேகத்துக்குரிய ஒன்றாகவே அமையும். எவ்வாறாயினும் இதனை முடிவு செய்யவேண்டியது மத்திய அரசே.

இவ்வாறுதமிழகமுதல்வர் மு.கருணாநிதிசட்டசபையில் இந்திய மீனவர்கள் கடலில் கொலை செய்யப்படுவது பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கும்போது தெரிவித்தார்.

நேற்று நடைபெற்றதமிழகசட்டசபைக்கூட்டத்தில் இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் கொலை செய்யப்படுவது பற்றிய விவாதமும் மேலோங்கியிருந்தது. உறுப்பினர்கள் கட்சி வேறுபாடின்றி இந்திய மீனவர்களின் கொலை குறித்து கண்டனக் குரல் எழுப்பினர். முதல்வர் கருணாநிதி நேற்றைய தமது உரையின்போது தஞ்னை இலங்கையின் ஊதுகுழல் என்று வை.கோ. கூறியதையும் குறிப்பிட்டார்.

வசைகள் குறித்து நான்கவலைப்படப்போவதில்லை. தமிழர்களைப் பாதுகாப்பதே எனது பொறுப்பும், கடமையும் என்றார். (அ-4)

மயிலம்பாவெளியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

மயிலம்பாவெளி கொலைகள்தொடர்பாகபொலிஸார் மற்றும் அதிரடிப் படையினர் இப்பிரதேசத்தில் நேற்று கடும் தேடுதலை மேற்கொண்டனர்.

இப்பகுதி மக்களிடம் விசாரணைகள் நடத்தப்பட்டன. கொல்லப்பட்டவர்கள் அனைவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த மேசன் தொழிலாளர்கள் என விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

CHEMISTRY

2008 A/L ORGANIC

06.04.07 வெள்ளி 4 p.m.

BY: DIAS B.Sc. (Hons) Spl. Che.

COLLEGE OF CHEMISTRY

பழம் வீதி, கந்தர்மடம்.

விற்பனைக்கு

Motor bike Ambition 135, 3CD Sony, Washing machine (Singer) என்பன விற்பனைக்குண்டு.

பீற்றர் வீடியோ, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

(59257) [ரயில்வே கடவைக்கு அருகில்]

மரண அறிவித்தல்

ஆரோக்கியநாதர் ஜேசுதாசன்

யாழ்ப்பாணம், கொழும்புத்துறையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் உரும்பிராயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆரோக்கியநாதர் ஜேசுதாசன் நேற்று (02.04.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் யோசுமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர் - செல்லம்மா தம்பதியரின் மூத்தமகனும் காலஞ் சென்ற செல்லப்பா, தையலம்மாவின் அன்பு மருமகனும் அன்ரனின் அன்புச் சகோதரனும் திருமதி யோகேஸ்வரன், சிவானந்தன், திருமதி நிர்மலானந்தன் யோகாம்பிகை, திருமதி ராசா மீனா, திருமதி தவனீதராஜன் செல்வலோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.04.2007) செவ்வாய்க்கிழமை பி.ப.2 மணியளவில் 271, பலாலி வீதி, கந்தர்மடம் விலாசத்தில் இடம்பெற்று, கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

271, பலாலி வீதி, கந்தர்மடம், திருநெல்வேலி. தகவல்: மனைவி, பிரசன்னா.

கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் விளையாட்டுத்துறைப் பயிற்சி ஆசிரியராக கடந்த மூன்று வருடங்களாக சேவையாற்றி மாணவர்களை விளையாட்டுத் துறையில் பல்வேறு மட்டங்களில் சாதனை நிலைநாட்ட ஊக்குவித்த எம் ஆசான்

தம்பித்துரை இரத்தினசிங்கம்

அவர்களின் திடீர் மரணச்செய்திகேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரிச் சமூகம்,
(சி-48862) யா/விக்னேஷ்வரா கல்லூரி, கரவெட்டி.

இதய அஞ்சலிகள்

எமது பாடசாலை அலுவலக ஊழியராக பல்லாண்டுகள் சேவைபுரிந்து ஆசிரிய உள்ளங்களில் அழியா இடம்பிடித்து இன்று அமரர் ஆகிவிட்ட

T.தேசியநாதன்

அவர்களுக்கு எம் இதய அஞ்சலிகளைத் தெரிவித்து, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

யாழ்.மத்திய கல்லூரி. (59258) ஆசிரிய வட்டம்.

மரணத்தைவென்று நிற்கும் நினைவுகள்

அமரர்

சிவக்கொழுந்து இராஜதுரை

திதி: 03 04 2007

நாட்காட்டிதான் சொல்கிறது
நீங்கள் சென்று ஒரு வருடமென்று
ஆனால்,
என்றும் நீங்கள் என் மனதிற்குள்,
எனக்குள்.

தோற்றம் 07 ★ 04 ★ 1944
மறைவு 14 ★ 04 ★ 2006

(59254)

என்றும் தங்கள் ஆருயிர் மனைவி
ஸ்ரீமதி தவேஸ்வரி இராஜதுரை
M.A., M.phil. (ஆசிரிய ஆலோசகர்)
குப்பிளான், ஏழாலை.

கண்ணீர் காணிக்கை

எமது கல்லூரியின் கல்விசாரா ஊழியர்

துரைசிங்கம் தேசியநாதனின்

திடீர் மறைவையிட்டு, எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த துயரம் அடைகின்றது. அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும், குடும்பத்தினருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச் சங்கம்,
(59253) யாழ்ப்பாண மத்திய கல்லூரி.

மரண அறிவித்தல்கள்

செல்லையா தியாகராசா

இணுவில், கே.கே.எஸ். வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லையா தியாகராசா அவர்கள் 01.04.2007 அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் சின்னம்மாவின் அன்புக் கணவரும் பரமேஸ்வரி (இணுவில்), சண்முகநாதன்(இணுவில்), சரஸ்வதி(கிளிநொச்சி), ஞானமணி(கனடா), காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், குமாரசாமி, அன்னம்மா, தங்கம்மா, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிருத்தியானந்தன்(பிரான்ஸ்), சிவானந்தன்(பிரான்ஸ்), சுந்தரமூர்த்தி(கனடா), நாகேஸ்வரி(வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் தங்கம்மா (பிரான்ஸ்), சாரதாதேவி (பிரான்ஸ்), பிரபாவதி(கனடா), சந்திரகுமார்(H.N.B.,வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனும் சுஜன்,பிறேம்ராம், சயந்தினி, சுதர்சினி, சுஜந்தன், சுதர்சன் ஆர்கியூரன், கீர்த்திகா, தட்சனா, திலக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.04.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 125, பாடசாலை வீதி, பண்டாரிக்குளம், வவுனியா. 024 2223442, 222 4691 தகவல்: அ.சந்திரகுமார் (மருமகன் - H.N.B., வவுனியா). (59242)

துரைசிங்கம் தேசியநாதன் (தேசி)

(அலுவலகப் பணியாளர், யாழ். மத்தியகல்லூரி)

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் தேசியநாதன் (தேசி) 01.04.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற துரைசிங்கம் - தங்கம்மா தம்பதியரின் மகனும் தவகுமாரி, பங்கஜகுமாரி, ஸ்ரீரங்ககுமாரி, மோகனகுமாரி, காலஞ்சென்ற முருகசேகரம் மற்றும் தனகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் துரைசிங்கம், குணபாலா, சுப்பிரமணியம், சோதிராசா, ஜீவகுமாரி ஆகியோரின் மைத்துனரும் புவனேந்திரன், தர்மேந்திரன், சசிகலா, துஸ்யேந்திரன், துஸ்யந்தி, கஜேந்தினி, சர்மிளா, கௌசிகன், இதயராஜ், ஜெயச்சந்திரன், தனுஷன், குகேந்திரன் ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(04.04.2007)புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப. 10 மணிக்கு அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

588/6, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (59247) தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நிழு உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org